# திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை
## பிறப்பிப்பவர்: தா.கிருஸ்துராஜ் இ.ஆ.ப.,

– – – –

ந.க.எண்.5981 /2023/ப2 நாள். 09.06.2023.

பொருள் – பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – ஈரோடு மண்டலம் – திருப்பூர் மாவட்டம் பேரூராட்சிகளில் அரசாணை (நிலை) எண்.125 நாள்.27.05.1999ன்படி அரசாணை எண்.76 நாள்.31.05.2019ன்படியும் நியமனம் செய்யப்பட்டது – 02.06.2001 முதல் முன் தேதியிட்டு கருத்தியலாக வரித்தண்டலர் / இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டது – சங்கராமநல்லூர் பேரூராட்சி – இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வரும் – பார்வதி (திரு)ந. என்பவர் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை –
1. அரசாணை (நிலை) எண். 125, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறைநாள்.27.05.1999.
2. அரசாணை (நிலை) எண். 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறைநாள்.31.05.2019.
3. சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.984/2013/அ3, நாள்.28.11.2019.
4. திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 33892/2019/ப2, நாள்.29.11.2019.
5. திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.1123/2020/ப2, நாள்.22.05.2020.
6. சென்னை பேரூராட்சிகள் இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.984/2013/அ3, நாள்.23.08.2021.
7. அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, அவர்களின் கடிதம் எண்.360/பேரூ1/2023–4,நாள்.08.03.2023. இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்ற நாள்.23.03.2023.
8. சங்கராமநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலரின் கடிதம் ந.க.எண்.4/2023, நாள்.05.04.2023.

– – – –

ஆணை:–

பார்வை 1இல் காணும் அரசாணை (நிலை) எண்.125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.ப3) துறை நாள்.27.05.1999ன்படி, பேரூராட்சிகளில் இருந்த நுழைவுப் பணியிடங்களில் (Entry Level Post) பணியமர்த்தப்பட்ட பணியாளர்களை கல்வித் தகுதியின் அடிப்படையில் சிறப்பின நிகழ்வாக ஒரு முறை மட்டும் (One Time Consideration) பணியாளர்களை கீழ்நிலை பணியில் நியமனம் செய்யப்பட்ட நாளின் அடிப்படையில் கருத்தியலாக இளநிலை உதவியாளர் / வரித்தண்டலராக நியமனம் செய்திட அரசாணை (நிலை) எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1) துறை, நாள்.31.05.2019ன்படி ஆணையிடப்பட்டது. இவ்வரசாணையில் குறிப்பிடப்பட்ட பணியாளர்களை கீழ்நிலைப் பணியில் நியமனம் செய்யப்பட்ட நாளான 02.06.2001 முதல் கருத்தியலாக (Notionally) நியமனம் செய்து ஈர்த்து கொள்ளலாம் என அரசு ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில் பேரூராட்சிகளில் அரசாணை (நிலை) 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.31.05.2019ன்படி பணிநியமனம் செய்யப்பட்ட பணியாளர்களுக்கு பணியினை 02.06.2001இல் உரிய நியமனஅலுவலரால் (Appointing Authority) வரன்முறைப்படுத்திடவும், மேற்படி அரசாணைக்கு எதிராக தொடரப்பட்ட W.P.No.17989/2019, W.P.No.23426/2019, W.P.No.21574/2019 மற்றும் W.P.No.27597/2019 ஆகிய வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புகளுக்கு உட்பட்டது என்ற நிபந்தனையுடன் வரன்முறைபடுத்தப்பட வேண்டுமென பார்வை 6இல் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசு கடிதத்தில் தெரிவித்துள்ளதற்கிணங்க இளநிலை உதவியாளர் / வரித்தண்டலர் ஆகியோர் நிலையில் பணிவரன்முறை செய்திட சம்மந்தப்பட்ட பணியாளரது பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் சம்பளமில்லா விடுப்பு / தண்டனைக் காலம் ஏதுமில்லாததால் தனியருக்கு கருத்தியலாக (Notionally) 02.06.2001ஆம் தேதி முதல் பணிவரன் முறை செய்து ஆணையிடப்பட வேண்டி பார்வை 8இல் காணும் சங்கராமநல்லூர் பேரூராட்சி செயல்அலுவலர் கருத்துரு சமர்ப்பித்துள்ளார்.

| வ. எண் | பணியாளர் பெயர் பதவி மற்றும் பேரூராட்சி | பணியில் சேர்ந்த நாள் | கருத்தியலாக (Notionally) பணியில் ஈர்த்துக் கொள்ளப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | திருமதி.ந.பார்வதி,<br>இளநிலை உதவியாளர்,<br>சங்கராமநல்லூர் பேரூராட்சி,<br>திருப்பூர் மாவட்டம். | 29.11.2019 | 02.06.2001 |

மேற்படி தனியரது பணிப்பதிவேட்டினை ஆய்வு செய்யப்பட்டதன் அடிப்படையில் சம்பளமில்லா விடுப்பு / தண்டனைக்காலம் ஏதுமில்லாததால் தனியருக்கு 02.06.2001ஆம் தேதி முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட பணியாளரது பணியினை வரன்முறை செய்த விவரத்தினை பணிப்பதிவேட்டில் பதிவு செய்து அதன் விவரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு சங்கராமநல்லூர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. இவ்வாணையானது அரசாணை எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.31.05.2019 மற்றும் பேரூராட்சிகளின் இயக்கக ந.க.எண்.984/2013/அ3, நாள்.23.08.2021 செயல்முறை ஆணை ஆகியவற்றிற்கு எதிராக தொடரப்பட்டுள்ள W.P.No.17989/2019, W.P.No.23426/2019, W.P.No.21574/2019 மற்றும் W.P.No.27597/2019 ஆகிய வழக்குகளில் வழங்கப்படும் தீர்ப்புரைகளின் முடிவிற்கு உட்பட்டது.

2. மேற்குறித்த வழக்குகளில் பிறப்பிக்கப்படும் நீதிப்பேராணைகளின்பொருட்டு இவ்வாணையினை நியமன அலுவலரால் திருத்தம் அல்லது இரத்து செய்யப்படும் எனும் உரிமை தக்கவைத்து கொள்ளப்படுகிறது.

09/06/23.

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
திருப்பூர் மாவட்டம்.

பெறுநர்

திருமதி.ந.பார்வதி,
இளநிலை உதவியாளர்,
சங்கராமநல்லூர் பேரூராட்சி,
திருப்பூர் மாவட்டம். (செயல் அலுவலர் மூலமாக) 9/6/23 9.6.23

2/6

நகல்– 1. பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை–28
2. செயல் அலுவலர், சங்கராமநல்லூர் பேரூராட்சி (தனியருக்கு சார்வு செய்து சார்வு நகல் அனுப்பவும், பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளும்பொருட்டு)
3. ப2 இருப்பு கோப்பிற்கு.